ஸ்ரீ

ராமஜெயம்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள்பேரிற் பலசரக்கு ஏலப்பாட்டு.

இஃது

ச - குப்புசாமிமுதலியாரால்

பழைய பிரதியைக்கொண்டு

பரிசோதித்து,

மதுரை புஸ்தகவியாபாரம்,

ச - பீ - சேகுஅப்துல்காதிருருவுத்தர்

அவர்கள் கேட்டுக்கொண்டபடி

சுந்தரமுதலியார்

அண்டு ஸன்ஸ் அவர்களது

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1886.

உ

கடவுள் துணை.

விளம்பரம்.

இதனை யியாவருக்குந் தெரிவிப்பது யாதெனில் மதுரைப் புதுமண்டபத்தில் பீங்கான்ஷாப்புக்கடை வியாபாரஞ்செய்யும் ம-ா-ா-ஸ்ரீ. ச-பீருகாதரொலிமுவுத்தர் அவர்கள்கடையில் தமிழ், துலுக்கு, கிரந்தம், தெலுங்கு, காலேஜ்முதலான புஸ்தகங்களும், ஆறுமுகநாவலர், ஊ-புஷ்பரதசெட்டியார் இவர்களால் போடப்பட்ட புஸ்தகங்களும், யாழ்ப்பாணம் புதியபதிப்பு அகராதியும், ஆரியப்பபுலவரால்செய்த பாகவதகவியும், ஷாப்பு வியாபாரமும் வேண்டியவர்கள் விலை சரசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு ஷெகுமாரர்

ச-பீ-சேகு அப்துல்காதிருமுவுத்தர்

ஸ்ரீ

ராமஜெயம்.

திருவல்லிக்கேணி
பார்த்தசாரதி பெருமாள்பேரிற்
பலசரக்கு

ஏலப்பாட்டு.

ஏலேலோ குருபாதம்-அம்பாள்-விநாயகனே முன்னடவாய் - நான்முகன்றன் ஸரஸ்வதியே எந்த- நாவிலுள்ளேவாருமம்மா சீர்பொழியுந்திருவல்லிக் கேணியெனும்புரிதனிலே -வாசமாகவீற்றிருக்கும் பார்த்த சாரதியுந் தேவியுடன் வேதவல்லித் தாயார்க்கு-கப்பல்-காணிக்கைகள் வெகுவிதமாய் - பாரமுடன்சரக்குகட்டியோடிவருஞ்சம்மதிக்க.

சரூர்.

நாழிகையொன்றுக்கு நானூறுகப்பல் - நாடோறுந்தப்பாமல் தினம்வந்திறங்கும் - சீருடைய படித்துறைக்கு

கப்பல்வருஞ்செய்தி - சென்னப்பட்டணங்கோட்டைஜெ
னங்களெல்லாங்கேட்டு - பூரித்து ஆனந்த சந்தோஷமா
கப் புதுமைகள்பார்க்கவந்து கரைதனிலேநிற்க - பாரிய
வர்த்தகர்கள் செட்டிகோமுட்டி - பட்டணத்தி லுள்ளகு
டி யின்னஞ்சிலபேர்கள் - வேணுமென்ற சரக்குகள் வே
ணபடிகொள்ள - மாட்டதனில் பணங்கொணர்ந்து வந்த
வர்களிங்கே - பேரான பேர்பெற்ற சென்னைபுரியாளும்
பெரியதுரை சின்னதுரை யெல்லாருங்கேட்டு - நாடாளு
மிங்கிலீஷ் கொடிக்காரரெல்லாம் - நாலாயிரஞ் ஜெனங்க
ள்வந்துமேநிற்க - ஓடாததண்ணீரி லங்கர்கள் பாய்ச்சி-
யொருபுறமாய்க் கப்பலெல்லாங் கரைதனிலே சேர்க்க
வேதவல்லித்தாயார் கடாக்ஷத்தினாலே வேகமுடன்க
ப்பல்வந்து சேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ) (க)

பொங்கிவருங் கடலோரந் தாயார் பூமகளாஞ் சந்நிதி
க்கே மங்களமாய் சரக்குகப்பல் இங்கே வந்திறங்கும் ப
டித்துறைக்கு நிரம்பிவருஞ்சரக்குகட்டி நெர பாரத்துட
னகனத்துவரும் தங்கிவரும்வழிகளிலே சற்றே தாமதங்
களில்லாமல் [ஓட்டம்] எங்கெந்ததீவாந் தரத்திலிருந்து
எண்ணிசொல்லி முடியாத சரக்குகளைக்கொண்டு பஞ்ச
வர்னக்கிளிகொஞ்சும் பங்காளதேசம் பலவிதமாய், நெல்
விளையும் பால்வடியுஞ்சம்பா சிறுமணியும் பெருமணியு

ஞ்சிறுராசிநெல்லு கொடிசம்பா மணக்கத்தைக் குங்கும
ச்சம்பா கொத்துமுத்துச்சம்பா குடைமல்லிச் சம்பா ம
ல்லிகைச்சம்பா மணமுள்ள சம்பா பங்காள தேசத்தில்
வால்நீண்டநெல்லு அனுமந்தசம்பா அள்வுற்றசம்பா அ
ந்தந்ததேசத்தில் விளைந்துவரும் நெல்லு கடுகுசம்பா மி
ளகுசம்பா கற்பூரசம்பா கன்னி யரிசியுடன் கருப்புநெல்
லரிசி சோனைமழைபொழியும் நல்ல மலையாளதேசம் து
ள்வெள்ளை நெல்விளையுந் தும்பைப்பூச்சம்பர சரியமாப
ர்வதத்தில் விளைந்துவருஞ்சம்பா சமுத்திரத்தில் விளை
துவருஞ் சடைச்சம்பாநெல்லு சாதகோதாவரியில்விளை
ந்துவருஞ்சம்பா சதுரானதேசத்தில் விளைந்துவருஞ்சம்
பா கன்னியாகுமரியில் விளைந்துவரும் நெல்லு ஸ்ரீரங்க
ராஜருக்கு விளைந்துவரும் நெல்லு திருவரங்கநாயகிக்கு
விளைந்துவருஞ்சம்பா செம்பாளை பூம்பாளை சுகதாதி அ
ரிசி கல்லுண்டை நெல்லுண்டை கார்போகத்தரிசி கட்
டையரிசியுடன்கப்பலுளதினுசு மலைதுவரைசிறுதுவரை
கடலைபயருளுந்து மற்றுமந்த கோதும்பை நவதான்யஞ்
சோளம் கறிமஞ்சள் பொடிமஞ்சள் காரமுள்ள மஞ்சள்
கப்பமஞ்சள் சாயமஞ்சள் பங்காள மஞ்சள் மலைதேன்க
ள் சிறுதேன்கள் காட்டிலுள்ள தேன்கள் நல்ல வாயிக்கி
சைந்தொரு தீவதாக்ஷிகளும் தேன்பாகு மணப்பாகு

சீமைகற்கண்டு சீநிச்சர்க்கரையோடு சேர்ந்த நல்லபெல்
லம் ஈச்சம்பெல்லம் பனங்கற்கண்டு உள்ளி வெங்காயம்
காச்சிருக்கும் புளிச்சக்கை நீரடிமுத்துக்கள் களிப்பாக்
கு சிறுபாக்கு கல்யாணப்பாக்கு கற்றகாம்பு கில்வத்திகா
ட்டுக்கொம்பரக்கு கம்மாரு கச்சோடு வெற்றிலைகள்நல்ல
கடல்முத்து சுண்ணும்பு காரமுள்ள புகையிலை சீரகம்
பெருங்காயம் சதகுப்பை ஓமம் சேர்ந்ததொரு வெந்தய
மும் கொத்துமல்லிவிரையும் கடுகுகள் மிளகுகள் களர்
சிக்கா யேலம் கடுக்காப்பூ சிறுலவங்கப் பட்டையொடுப
த்திரி சுக்கு திப்பிலியோடி செவியமொடு கோஷ்டம் ச
டாமாஞ்சி அதிமதுரம் கண்டுபாரங்கி சிற்றரத்தை சிறு
தேக்கு செந்தூரம் தும்ராஷ்டகம் சிறுநாவல் பூவோடு
குரோசானி ஓமம் மற்றுமந்த வாய்விளங்க மராட்டிய
மொக்கு பரங்கிசக்கை கருஞ்சீரகம் காட்டு சீரகம் அதி
மதுர லவங்கப்பூ தாளிசப் பத்திரி அக்ராகாரங்கள் கடு
குரோகணியும் கற்பூரதினுசுகள் கட்டி சாம்பிராணி கா
ரமுடன்மெழுகுகள் கட்டிகுங்கிலியம் வெண்காரம் புளி
காரம் படிகாரம் நவாச்சாரம் இந்துப்பு பாலுப்பு சயிந்
துப்பு லவணங்கள் துத்திநாகத்தோடு செந்தூரம்பச்சை
சித்திரங்க ளெழுதநல்ல அரிதாரநீலம் ஏலக்காய் சாதிக்
காய் வால்மிளகு லவங்கம் ஏற்றமுள்ள ஜாபத்திரி ஜாதி

க்காய்பட்டை குங்குமப்பூ கஸ்தூரி கோரோஜனங்கள்
குமுகுமென்று வர்ச்சிக்கும் பச்சை கற்பூரம் சந்தனக்க
ட்டையின் சட்டங்கள்புனுகு சலவைபன்னீர்கதம்பபொ
டி அத்தர் பச்சிலிக்கிச்சிலி கிழங்குகள் பில்லை பரிமளம்
வீசிவரும் கஸ்தூரிமஞ்சள் சந்தனத் தைலங்கள் சாம்பி
ராணிவத்தி சம்பங்கித்தயிலங்கள் கிலெண்ணெய்பேபா
ய் ஸ்ரீகந்தம் அகில்கட்டை தேவதாரிகள் தீவிலுள்ள சர
க்குகள் அபுரூபவஸ்து மலை வேர்கள் மலைபாள சஞ்சீவி
நல்ல நிலவேம்பு விஷமுஷ்டி வேம்புடனே சூர்ணம் செ
த்தவரைப் பிழைப்பிக்குஞ் சஞ்சீவி மருந்து வெட்டுண்
ட காயங்கள் ஒட்டநல்ல மருந்து வாழாத பெண்களுக்கு
வாழ்வுதரு மருந்து மைந்தரில்லா மலடிக்குப் பிள்ளைத
ருமருந்து கூடாத ஆணும்பெண்ணுங் கூட்டிவைக்கு ம
ருந்து குற்றங்கள் குறைதீர்க்குங் குணமுள்ளமருந்து ஆ
ணுடனே பெண்பிரிந்து அலைந்துகெட்டபேரை ஆசையு
டன்கூட்டிவைக்கும் அந்தரங்கமருந்து தேசாந்திரம்ஓடி
திசைகெட்டபேரை சீக்கிரமாய்க் கொண்டுவந்து சேர்க்
குநல்லமருந்து இத்தனை மருந்துவகை இனிசொன்னதி
னுசு இன்னமின்னஞ் சரக்குவகை பேர்சொல்லக்கேளு
ம் பேர்சொல்லாசரக்குவகை ஆயிரங்கோடி பேர்சொல்
லும் சரக்குவகை பதினாயிரங்கோடி இத்தனை சரக்குவ

கை எடுத்துமேகட்டி இசைவுடனே கப்பலெல்லா மொருவழியேதள்ளி பத்திரமாய் வழிகளிலே தண்ணீரொல்லாந்தாண்டி பலசரக்கு கப்பல் வந்து சேர்ந்ததையா சுவாமி (ஏலேலோ) (உ)

இன்னமின்னம் சரக்குவகை நல்ல ஏற்றமுள்ள கப்பலிலே எண்ணிசொல்ல முடியாது கொஞ்சம் சூக்ஷ்மு டன்சொல்லுகிறேன் கப்பல்வருந் தினுசுகளை நம்மால் கணக்குசொல்லி மாளாது (சரூர்) பட்டுகள் தாபிதா பச்சைபட்டு மகமல் பங்காளதேசத்து பார்க்களாத் துண்டு சாதாதுப்பட்டி சலவை யுருமால்கள் சரிகைநெய்தபிடவைகள் சாயமுள்ள தோம்பு மெத்தைக்குத்தகுந்தநல்ல மேல்பட்டு ஜாலர் விதவிதமாய் ரவைபட்டுச் சல்லா வெண்சேலை மேலுக் கழகானதொரு மாதளம் பூப்பட்டு மக்காவில் வெண்பட்டு மைமைசெங்காப்பு பங்காளப் பட்டுடன் பஞ்சவர்னச்சேலை அச்சமாய்க் கட்ட நல்ல பச்சை பீதாம்பரம் ஆத்தூரு பழவெற்காடு பாக்குவர்னச் சேலை ஐதராபாதரில் தாட்டிபத்திரி சேலை மிஞ்சி முடுக்கானதொரு கெஞ்சத்துச் சேலை மேலான மேற்கித்திச் சேலத்துச் சேலை கெண்டு கோட்டைச் சேலை கொண்டதொரு கோடி கட்டாரி பட்டுபெட் டாவர்னச் சேலை

மேலானசவுக்களிரெட்டைகுட்டைக்குலுக்கிகண்டதொ ருபுலியூரில் கொள்ளுநல்ல சேலை நிலையங்கி பாகைகள் நீண்டிருக்குங்குல்லா நிசாருடன்பாவாடை யுருமாலை சவுக்கம் நடுக்கட்டு ரவிக்கைகள் நாலுவிதம் சீட்டி நாமடியுமடிசஞ்சி நேர்த்தக்குங்கித்தான் ஜார்சிக்கும் சகலாத்து சன்னதாவலையல் சட்டமுடன் துப்பட்டி பார்க்கரோக்கு பார்வைக்கு மோகிக்குஞ் சீமைநூல்பட்டு பட்டணத்துப்பெண்களுக்கு வாங்கநல்ல பிடவை முத்துகள் கல்லுகள் முத்துரத்னக்கெம்பு மோகன மாலைகளு முத்துசரமாலை நற்பவழம் ஜாதிலிங்கம் நாலுவிதப்பச்சைக வரத்த கல்லுகள் நாகரீகரவிக்கை வச்சிரங்கள்வைடூரிய மாணிக்கநீலம் மஞ்சணிறம் கோமேதகம்புட்பராகங்கள மலிந்தவிலைதருப்புகள் மாந்தாளிபச்சை மற்றுமந்த கப்பலிலே முத்துவந்த தினுசு - கோர்வை கொலுசுகளுங் கையிலிடுமுத்து கோடானகோடி கல்லின்ழைத்தபாட்டில அடுக்குவளை தோள்வளையல் அதுகுண்டுவெங்கி- அழகாபைசிபந்து கையிலிடுங்கொலுசு கண்டசரம் சரப்பளிகள் கடல்முத்துமாலை கல்லிழைத்தபட்டயங் கழுத்திலிடுங்கண்டி ஆரங்கள் பதக்கங்கள் அட்டிகைகள்நல்ல அதுகளுக்குமேலான மகரகண்டிகைகள் காதுக்கு நிறைந்

திருக்கும் கத்தரிபாவளிகள் கம்மலிடுஞ் ஜிமிக்கு சரம் காதுக்கசைவாளி ஆணிமுத்து கல்லிழைத்த அடுச்குழு க்குகம்பி-அழுகானபுலாக்கு அன்ன மூக்குத்தி கலிக்கத் துரா கல்லிழைத்த கட்டியொடுபட்டம் காதுக்கு நேரா ன திருநெற்றிசுட்டி சந்திரபிறை சூரியபிறை தலைநிறை ந்தசாமான் தளதளெனக் காந்தியுடன் தங்க வொட்டியா ணம் பாதசரஞ் சுருள்கொலுசு சிலம்புதண்டை பாட்டி ல் பத்துவிரல் மோதிரங்கள் மிஞ்சியுடன் மெட்டு காது க்குசவுக்களிகள் கல்லிழைத்த சோடி கண்டசரம் பதக் கங்கள் முத்திரைசிகாயம் கல்லிழைத்த பெருங்கடுக்கன் மகரகுண்டலங்கள் மண்டலத்துசெனங்களுக்கு வாங்க நல்ல நகைகள் ஆபரண வகையெல்லா மணி யணியாய் வைத்து அதற்கேற்றபெட்டிகள் பூட்டுகள்சாவி மோரா விராகன்கள் சாளுரக்காசு மேலான சீமையார். முத்தை கள்ரூபாய் ஆதியிலேயுண்டான ஸ்ரீராமர்மேடை அதுக ளைச்சார்ந்ததொரு காசுபணந் துட்டு அரக்கு முத்திரை வைத்து அடையாளங் கட்டி அடையாள மாகவே காசு பணமெல்லாம், அந்தந்தயிடத்தினில் பத்திரங்கள் பண் ணி சிறுமுத்து பெருமுத்து சிறுராசிமுத்து தூரத்தில் விளைந்துவருஞ் சுண்டைக்காய் முத்து பருத்த முத்து பெருத்தமுத்து பவழநிறமுத்து பம்பாயிசீமையிலேவி

ளைந்துவருமுத்து கடைந்தமுத்து வுருண்டமுத்து கட்டாணிமுத்து கருங்கடலில் விளைந்துவருங் காந்தியுள்ள முத்து வாளிமுத்து நீலமுத்து வார்கடைந்தமுத்துவை யகத்து ஜெனங்களுக்கு வாங்கநல்லமுத்து ஒட்டுமுத்து தந்தமுத்து சுட்டிமுத்துநல்ல ஒப்பில்லாமாணிக்க ஜீவரத்தினங்கள், கோவர்த்தனகிரியில் வாங்கிவந்தமுத்துகோபாலகிருஷ்ணனுக்கு சாத்தநல்லமுத்து அயோத்தியாபுரியதனில் வாங்கிவந்தமுத்து அபிராமலட்சுமணற்குசாத்தநல்லமுத்து காசிதேசத்தினில் வாங்கிவந்தமுத்து கனமானவர்த்தகர்கள் விலைமதித்தமுத்து பரதபுரி சீமையிலே வாரிவந்தவச்சிரம் பலமானவர்த்தகர்கள் விலைமதிக்கவச்சிரம் குடகுதேசத்தினில் வாங்கிவந்தகெம்பு கோடான வர்த்தகர்கள் விலைமதித்த கெம்பு டில்லி தேசத்தினில் வாங்கிவந்தபச்சை, தேசத்து வர்த்தகர்கள் விலைமதித்தபச்சை நாலுதேசத்தினில்வாங்கிவந்தரத்தினம் நகர் சென்னபட்டணத் துறைவந்திறங்க தங்ககட்டி வெள்ளிகட்டித் தனித்தனியாய்வரவே தாம்பரம் வெண்கலங்கள் பித்தளை தூராக்கள் இரும்புசட்டம் ஈயகட்டி எழுகு கம்பிநல்ல இதுகளைச்சார்ந்ததொரு தண்டவாளங்கள் சீமைமண் சாடிகள் சின்ன சின்ன குப்பி சீசாக்கள் வளையோடு பீங்கான்கள்கிண்ணி கிராவகம்பிராந்திகள் சாரா

யப்பிப்பாய் தனித்தனியாயந்தந்த யிடங்களிலேவைத்து பச்சைகள் நீலம் குலோப்புகண்ணாடி பச்சையில் பெரி தான பன்னீருகுப்பி கண்ணாடி கதவுகள் கைப்பெட்டி மேஜை கவுசிகள்குருச்சிகள் கட்டிலொடுதொட்டில் மெ த்தைகள் திண்டுகள் பிள்ளைதலைகாணி விதவிதமாய்மே ற்கட்டு போகுந்துறைசாமான் மெழுகுசீலைகூடார மேக் குகள்வேம்பு விதவிதமாய்சீமைநாய் குல்லாக்கள் சொக் காய் அடுக்குவத்திமெழுகுவத்தி அதற்கேற்ற பீடங்கள் அலங்காரகூடங்கள் மெழுக்குவத்திகாந்தல் ககனவிளக் கதிகோடி காந்தியுள்ளவிளக்கு கண்ணுக்கு அழகான ர சகுண்டுவரிசை நதருக்கு அழகான சாய பொம்மைகளு ம் சார்ந்திருக்கத்திண்டுகள் சரிகைமேற்கட்டு தங்கமொ டுவெள்ளித் தட்டுதாம்பாளம் சதிருக்குஏற்றதொரு சா திக்காய்கிராம்பு வால்மிளகு லவுங்கமொடு வர்னமுள்ள பெட்டி வெற்றிலைமடித்துக்கோற்கும்வெள்ளியீற்குச்சு ம் விதவிதமாய்பன்னீரு குப்பியொடுகிண்ணி பட்டுபாய் பிரப்பம்பாய் படுத்திருக்கும் பாலிப்பாய் பட்டணைத்து றைகளுக்குக் கெட்டிதாழம்பாய் பட்டுரத்னக் கம்பிளி கள் ஜோடு ஜமக்காளம் பந்தலுக்கு யேற்றதொரு மட்ட ப்பிரப்பம்பாய் கண்ணாடி காம்பிருக்கள் கட்டில்கள்சோ பா காட்டினிலே புள்ள கலைமான்கள் கொம்பு கருத்திரு

க்குஞ்சவுரிநல்ல வெண்சாமரங்கள் கிருஷ்ணஜலப்பேட்டை புலித்தோல்கள்நல்ல உட்கார்ந்து ஜெபம்பண்ணுஞ் சித்திராசனங்கள் பட்டுகொடை வெள்ளிகுடை பச்சைகுடைநீலம் பவழகுடை முத்துகுடை தங்ககுடை வெள்ளை வீதிவரும்பாவாடை வெள்ளித்தடிகள் வேடிக்கையாகவே கப்பலில்வரவே தாளி பனைவோலைகள் சீமைகடுதாசி பேனாக்கள் இங்கிபுட்டி பிரப்பந்தட்டு பீங்கான் கோழிகள் செவ்வுகள் சுவடிபலகைகள் சிறுராசி பெருராசி ஆடுபலகைகள் சங்குகள் பாவாடை சரக்குபித்தளைகள் சட்டமாய்க் கப்பலிலே திட்டமாய்க்கட்டி அஷ்டலட்சுமிபொழியும் ஆனந்தக்கப்பல் அளவற்ற பாக்கியங்கள் குறைவற்றசெல்வம் நித்திய லட்சுமிபொழியுந் திருவல்லிக்கேணி நினைத்தவரங் கொடுப்பாளந்த வேதவல்லித்தாயார் இஷ்டமுள்ளலட்சுமி கடாட்சத்தினாலே ஏற்றமுள்ளகப்பல்வந்து சேர்ந்ததையாசுவாமி.(ஏலே) (௩)

தார்குழலாள் கப்பலிலே நல்ல சஞ்சீவிமருந்துவகைவையகத்துசனங்களுக்கு நல்ல வியாதியருமருந்துவகைபூமியிலே சனங்களுக்கு நல்ல பொன்னாகும் இலைதினுசு (சஞர்) பேரானரசவாதம் பச்சிலைகள்தினுசு பெருவியாதிரோகமறுஞ் சஞ்சீவிமருந்து சயரோகந் திமிர்வாயு த

னூர்வாயு ரோகம் கருமேகம் காமாலை மார்நோவு குன்மம் கண்குருடு செவிடுகள் கால்மொண்டி முடங்கள், கண் காசபடலங்கள் வாங்குநல்ல மருந்து மண்டையிடி தொண்டைகட்டு மகத்தானரோகம் மாளாதவியாதிகள் தீர்க்கநல்லமருந்து திக்குதெரியாது திசைகெட்டபேர்க்கு தீவியஞ்சனம்நல்ல சீமைதயிலங்கள் தேசத்து சனங்களுக்கு செயமுள்ளமருந்து தேகமெல்லாஞ்சுந்தரமா யழகு தருமருந்து உலகத்து ஜனங்களுக்கு உபகாரமருந்து ஒருநாளும்வியாதிகள் வாராதமருந்து மனிதற்குள் சீமையில் சொரணைகெட்டபேர்க்கு மதன காமேசுர அவிழ்த கஞ்சாக்கள் குல்கந்துவில்வாதிலேகியங்கள்யாவும் கீழ்நாடுமேல்நாடுபேர்பெற்றமருந்துமருந்துவகைதினுசெல்லாம்வகைவகையாய்வைத்து மற்றுமந்த கப்பலிலே ஆழமட்டுஞ்சாமான் கதவுகுழையிரும்புசட்டக் கைபிடிகள் வளையம் கட்டிலுக்குந் தொட்டிலுக்கு மூலசட்ட சாமான் தலைக்கடைக்கதவுகள் கைபிடிக் குழைகள் வைபிரத்தூண்கம்பங்கள் வெண்கலப்பட்டங்கள் சாரங்கள்தயிலங்கள் சங்கிலிகள்குப்பி தாழவாரப்பெட்டிக்கு நெடும்பூட்டு சாவி காடைவிளக்குகள் கைவிளக்குநல்ல கலியாணப்பந்தலுக்கு யேற்ற குத்துவிளக்கு தூங்காவிளக்குகள் தூங்குமலைகொலுசு தொட்டிலுக்கு சங்கிலிகள் தோசைக

ல்லு அடுப்பு மண்ணாலுருவானவாணய்கரண்டி மண்வெட்டிகள்நல்ல வெட்டுகுந்தாலி பிஸ்தோல்துபாக்கிகள் பீரங்கிகுண்டு பல்லயம்பிட்டிகள் பாங்குகட்டாரி கெடியாரமாணிக்கம் கும்பினிகள்பாரு கணக்குவகைதுகைசொல்ல இட்டசம்பிரதிகள் ஆயுதங் கத்திகள் அலேமான் துருப்பு ஆழத்தின்மீதெரிய நச்சுகுழல் கொம்பு ஆனேகள் குதிரைகள் ஆயிரங்காலரல் ஆந்தோளி மேனுக்கள் பல்லாக்குடோலி கோதரங்கள் கூண்டு வண்டி சக்கரங்கள் சட்டம் குதிரைகட்டுசாரட்டு தண்டிகைக ளோட மான்களொடுமயிலுகள் மாடப்புறவும் மைனுக்கள் பாத்துகள் பஞ்சவர்னக்கிளிகள் பால்கறக்கநல்ல பசுக்களோடெருமை பச்சைவெண்ணெய் கடைந்தெடுக்க மரங்களொடுமற்றும் சீமையெலி பெருச்சாளி சிறுத்தையொடு முயல்கள் தேவாங்கு கருங்குரங்கு சிறந்த பூனேகளும் செந்நாய்கரடி சிவிங்கி கொண்ட முயலும் சீமைநாய் வேட்டைநாய் இன்னமின்னஞ்சாதி கடம்பைகள் உடும்புகள் கோவேறுகழுதை கண்ணுக்கு நிகரான நீர்மனுஷசாதி விதவிதமாய் கப்பலில் வேடிக்கையாக வேகமுடன் கப்பலிலே விசையோட்டம்வரவே சிறுமீன்கள் பெருமீன்கள் சிதறியங்கேயோட மலேபோலமீன்களெல்லாம்வந்தங்கேநிற்க தவுட்டுமோ தான்கலந்து சடைத்தகொழுக்கட்

டை தாமதங்களில்லாமல் எடுத்துமுன்னேபோட்டு அலைகடல்வழியெல்லாம் ஒருநொடியில் தாண்டி ஆனந்தக் கப்பல்வந்து சேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ) (௪)

சங்கயமாபர்வதத்தில்-நல்ல-சந்தனத்தால் சேர்த்தகப்பல்-மண்டலத்து சனங்களுக்கு-நல்ல-மாளிகைக்குமரதிநுசு பட்டணத்துசனங்களுக்கு நல்ல-பழவிதமாம் பலதிநுசு (சரூர்) சதுர்கட்குநதிரான எலுமிச்சம்பழங்கள் சாதிநார்த்தம்பழச் சர்க்கரை யன்னாசி செவ்வாழைப்பழக்குலைகள் சேர்ந்த ரஸ்தாளி செவ்விளநீர் சீமையத்திப்பழங்கள்-கிளிமூக்குமாம்பழம் மணியில்லாகிச்கிலி வகையானமாதளம் பழங்களொடுதிநுசு சீத்தாய்பலாப்பழம் சொகுசானசீனி செடிநார்த்தை கொடி நார்த்தை சீமைகிச்சிலிக் கொய்யாப்பழம்நல்ல கொத்துத் திராட்சிப்பழம் கொடிதனில் விட்டுவருங் கட்டு மாம்பழங்கள் பேரீச்சம்பழம்நல்ல பருப்பு கற்கண்டு பேரானகச்சூரி காய்களொடுதிநுசு பட்டாணிமுந்திரிப் பருப்புகள்திநுசுபழவகைகள் திநுசெல்லாம் விதவிதமாய்வைத்து-பங்காளகப்பலிலே பணியாரதிநுசு-தொட்டுபால்மனோகரம் தேன்குழல்பூரி துள்ளு மந்த அதிரசம் பாற்குழம்புலட்டு-சோமாசியென்பது மேனியதுவாகும் தின்னும்வகை ப

லகார மின்னமின்னங்கொண்டு சகிபிண்டபீமனுக்கு சர்க்கரை மிட்டாயும்-சாரமுள்ள பாலன்னந் தயிர்வெண்ணெய்பாலும்- புளியோரை தத்யானம் பொங்கல்வடை தோசை போகுமாம் அடிசில்செய்யும் இட்டளிகள்நல்ல சக்கரான்னங் கொடு மணகோரை உண்டை அக்காரவடிசில்கள் பங்காளபாத்து வேதவல்லித்தாயார் அடிசில் செய்யும்வகையை விதவிதமாயின்னதென்று கணக்கிடப்போமோ பார்த்தசாரதிதேவி யடிசில் செய்யும் வகையை பணியாரமின்னதென்று கணக்கிடப்போமே பணியாரவகைதினுசு பழதினுசுவகைகள் பரிமளங்கள் வீசிவரும் புஷ்பவிதஜாதி சம்பங்கிபுஷ்பங்கள்சாதிமல்லிகைகள் சரங்களொடு மாலைகட்டி குருவேர்கள் தவனம் பன்னீருபுஷ்பங்கள் பந்திபுஷ்கள் பட்டு சாமந்திகள் பலவிதங்கள்சல்தி செண்பகப்பூ நல்ல செங்கழுநீராம்பல் சிறுசெண்பகத்தோடு சேர்ந்தவனமாலி நீலவன்னப் புட்பங்கள் நீண்டவிருவாட்சி மேலானசுரபுன்னை முல்லை செந்தாழைபுட்பவகை ஆயிரங்கள் பொட்டணங்கள்கட்டிபேர்பெற்றகப்பலிலே இன்னமின்னந்தினுசு கல்தேக்கு நெல்தேக்கு காட்டிலுள்ள மரங்கள் கரிவோடு இரிவோடு கருப்புமரஞ்சாதி வெண்தேக்கு பூந்தேக்கு வெட்பாலைமரங்கள் வேப்பைமரம் நாவல்மரம் காட்டிலுப்பை மா

ங்கள் சிறுவேங்கை பெருவேங்கை சிமைபனைமரங்கள், தேர்ந்தெடுத்தொருவயிரங்க ளானநல்லபட்டை மச்சுகட்டுமா ளிகைக்கு அச்சுமட்டம்பலகை மதனகால்புள்ளிசட்டம் மாதிரிப்பலகை குதிரைபட்டைக் குருவிக்கால் குத்துக் கால்சட்டம் கூடத்துக் கம்பங்கள் சரங்களொடு தூலம் வெழல்கட்டுந்தாரங்கள் வாசற்காலகதவு மாளிகைக்குந ல்லநல்ல வகைவகையாய் மரங்கள் ஈடிதைகள் கவ்வாட் சிபல ஆரைக்கதவு சிழ்மெத்தை மேன்மெத்தை தாங்கு நல்லசரங்கள் அலமாரிக்கதவுகள் ஆள்களுக்குமணைகள் அழகான விசுப்பலகை நாற்காலி மணைகள் மரங்கள் வ கைதினுசெல்லாம் வகைவகையாய்வைத்து மகாகனமா ய்கப்பலிலே வாத்தியங்கள் கோஷ்டம் முகவீணை நாகச ரம் விருதுகள்பேரி மேளமொடுதாளங்கள் விருது சின் னங்கள் தாளமொடுமத்தளம் தமரு வாத்தியங்கள் இது களுக்குமேலான கிடுகிடுவாத்தியங்கள்காளாஞ்சிதுத்தா ரிகனகதப்பட்டை பிள்ளாங்குழல்நாதபிட்டில்வாத்தியங் கள் பெருசாலே எக்காளே சாரங்கிவாத்தியம் பாம்பு நாக ச்சுரம் பதினெட்டுவாத்தியம் பாகவதகோஷ்டங்கள் சங் கீதகீர்த்தனம் வீணையொடு சின்னங்கள் வேதார்த்தவே தியங்கள் தாம்தாமென்று கப்பலிலே சட்டமுடன் வர வே-அதிர்வேட்டு கீல்புருசு ஆகாசபாணம் அழகானமத்

தாப்பு ஐந்துதலைபாணம் பொரிபாணம்வெடிபாணம்இ
டிபாணவித்தை புட்பபாணம்நல்ல கப்பல்பாணங்கள் சு
ழல்பாணம் உழல்பாணம் சீறிவரும் பாணம் சீமையில்
செய்துவரும் பலவிதபாணங்கள் கம்பபாணம்நல்ல கை
யில்விடும்பாணம் காந்தியுள நட்சத்திர பாணங்கள்தினு
சு நீலவர்னபாணமொடு சூரியபாணங்கள் ரீரீயெனப்பே
சிவரும் தவளைபாணங்கள் பாணவகைதினுசெல்லாம் ப
த்திரமாய்வைத்து பாங்கானகப்பலிலே பலதேசச்சரக்கு
கொச்சிதேசம்நல்ல குடகுதேசங்கள் கோபுரங்கள்வங்க
ணங்கள் கர்னாடுதேசங் காஞ்சீபுரம்நல்ல காவேரி தீரம்
கன்னாறுபாயும்நல்ல சோழதேசங்கள் மலையாளமொடு
மதுரை தெற்கு தேசங்கள் தஞ்சையொடு திருநெல்லி
வேலியொடுசீமைமண்டலங்கள் துண்டீர நகரங்கள்தே
சம் குற்றாலங் குறநாடு கும்பகோணதேசம் கோதாவரி
தீரங் கொண்டவட்டிசீமை-ஏபாளம்-நேபாளம்-பங்காள
தேசம்-வாய்சொல்லுதெரியாத மாறுவடிதேசம் இராச்
சியத்திற்செழிப்புள்ள மைசூறுதேசம் நடுச்சோழ மண்
டலம் நாகரீகக்காஞ்சி அங்கதேசம்நல்ல வங்கதேசங்கள்
அதுகட்குமேலான இன்னமின்னங்தேசம் காசிதேசம் ந
ல்ல கலிங்கதேசங்கள்-கன்னாறுபாயும்நல்ல கல்கத்தாசீ
மை டில்லிதேசம்நல்ல சிந்து தேசங்கள் திக்கு தெரியா

தொரு ராணிதேசங்கள் தலமாகப் புரிநல்ல சேதாரபுர மும் வாரணாசுருக்ஷேத்ர வடமதுரைபத்ரி ரங்கரோத்த ரிநல்ல கண்டகோதிரம் கீழ்நாடு-மேல்நாடு - தென்னாடு தேசம் பப்பளதேசத்தில் சரக்குகள்கொண்டு திக்கு திக் காய்கப்பலெல்லாம் ஒருவழியாய்ச்சேர்ந்து ஸ்ரீராமஜெய மென்று யெழும்பியேகப்பல் துடுப்புகள் நாட்டியவாள் ஜலங்களையொதுக்கி சீர்பொழியுங் கப்பல்வருஞ் செய்தி யைக்கேட்டு திக்குதிக்குகள்தோறும் வேட்டுகள்போட் டு சிங்கக்கொடிகட்டி சிங்காரமாக ஜெயமுள்ள கப்பல்வ ந்து சேர்ந்துதையாசுவாமி (ஏலேலோ) (ரு)

உலகமெலாம் பெற்றெடுத்த-அம்பாள்- உத்தமியாள் பத்தினியே மகிமையுடன் தேசமெல்லாம் வந்தருளும் கப்பலிலே (சரூர்) மலையாளங் கோங்குடன் நிலைசே ருமுடனே மைசூர் களத்தூருவந்தேமகிழ்ந்து கலமான கோயிலடி இளங்காடுநேரோ கண்டியூர் திருக்காடிபள்ளி செம்பலகை கோலமுள்ள திருவையாறு திருத்தலூர் ஊ ரையூர் கொஞ்சும்பசும்பெதிர்கோயில் சஞ்சை நகர்கண் டு தன்னவன்மைகாவல் உண்மையாய்ப் பார்த்து தானு மாய்ப்பாய்மரம் மூன்றுபதினாறு நன்மையென்றுந் தே னாலே சீனிகலப்பு நற்பமுடன்சொற்பமாய் சொற்பமாய்

ப்பாரு தந்திரமதானநல்ல துப்பாக்கிசுட்டி சீராய்நடுக்க ட்டு சொருசுடனேகட்டி தூங்குமஞ்சசப்ரமுடன் கட்டி னூர்தாலி, அந்தந்ததேசத்துக் கதிபதிகளாகி இஷ்டாங் கமாகக்கொண்டு சாஷ்டாங்கமாய்வரச்சே (சுருக்கச்சொ ல்) பக்தியுடனே உலர்ந்து இங்கிலீஷு பிராஞ்சு லாட்டு மேலாட்டு அணைநாளைப்பூட்டு நீரின்மேல்நெருப்பு கொ ண்டேபணிந்தநொரு பீரங்கிதீர்ந்து குமுதமுடன்சப்ப ளிது சமுகநிறை கண்டு தொண்ட ரெல்லாம் புகழும் வேதவல்லித்தாயார் துரிதமுள்ள கப்பலில் தப்பாமல்வ ருகப்பா (ஏலேலோ) (ம)

அதிபதியாள் அன்னக்கொடி அம்பாள் தருமந்தி பு ண்ணியவதி அம்பாள்-கப்பல் கடலோட்டம் தத்தையா அணைகொடியில் வருகுதிங்கே (சரூர்) அந்தியே சோழ மண்டலமதுகடந்து அந்ததேவஸ் தலங்களது கண்டு க ன்னள்ள மழைபொழியும் அகமாறுமாதம்-சனத்தநொ ருநெல்விளையும் மற்றுமுள்ளசீமை அவ்வூரு கப்பலிது ஆனந்தமாக அன்புடனே சுத்தியல்லோஎல்லைதுறைதா ண்டி இருகாதுகொப்பு இரட்டைஒட்டியாணம் இலட்ச ம்பொன்பெற்றநொரு பச்சைவடம் கொண்டுகொண்டு வந்தம்மனுக்கு கொடுத்தேபணிந்து கோலமுள்ள கப்ப

லுக்கு மேலும்வழிகாட்டி சிலமுள்ளகப்பலிதுவழிகளெல்லாந்தாண்டி சென்னப்பட்டணம் துறைவந்துசேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ) (எ)

உத்தமியாள்வேதவல்லி பத்தினியாள் கப்பலிது-சித்தமுள்ளபட்டணத்தில் சேர்ந்ததென்றுதான்பாட (சரூர்) உலகமாதாவே உத்தமிகாமாட்சி உமையவள்தன்னருள் உத்தாரம்பெற்று அமையுமிந்தகப்பலுக்கு-சமயமதுபார்த்து ஆகாரங்கண்டெடுத்து அடித்தட்டில்சேர்த்து ஸ்ரீகாரங்கண்டெடுத்து சிக்கந்திருப்பி காசாரங்கண்டெடுத்து கம்பிகயிர்கட்டி நமசிவாயங்கொண்டு நாங்கூரம் பாய்ச்சி நாலுவேதத்தாற் பீரங்கியேற்றி அஷ்டாட்சரத்திலே காற்றுகளும்பாய அம்மனுடன் கப்பலிது விஸ்தாரமாக-அன்பாகக்கணபதியை மின்பாகவைத்து அந்தமுடன்கப்பல்வந்து சேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ) (அ)

கப்பலென்றால் கப்பலிது-நல்ல-கனமுடைய கப்பலிது-கப்பல்வரும் பருவதினால் சலங்கள் கரைபுரண்டு குமிளமிடும் இருகரையும் நீர்பெருகி தத்தையா ஏக சலம் வழிந்திடுமாம்-வேதவல்லி யதுவறிந்து அம்மன் கால்வரிசையுச்சரித்தாள் (சரூர்) காவேறி தானறிந்து வேதவல்லித்தாய்மேல் கடாக்ஷம் வைத்து கப்பல்தனை துறை

கொணர்ந்துசேர்க்க கரைபுரண்டு காவேரி வெருவெள்ளம்வரவே, அம்மனுடதன்மகிமை ஆரறிவரொன்று ஆதிரங்கர் சந்நிதிக்குப் பின்பாகவேதான் அலைவந்து மோதவே கரைதனிலேயொதுக்கி உத்தரபாரிசம் ஒருபக்கந்திரும்பி ஓங்காரமாகவே உருண்டமணல்வாரி சத்தமிட்டுத்தத்தளித்துத் தான்புரண்டு கப்பல் சதாகாலம் அம்மனை சிந்தைதனிலெண்ணி வேதவல்லித்தாயாரைதியானமதுபண்ணி வேகமுடன் இங்குவந்த கப்பலிதுகண்டீர் (ஏலேலோ) (௬)

வாழியவே வாழியவே ரத்ந-மகமேருவாழியவே ஈஸ்வரரும் பார்வதியும் தத்தையா யின்பமுடன் வாழியவே மாவிஷ்ணு மிலட்சுமியும்-கோவிந்தா மண்டலத்தில் வாழியவே பிர்மாவும் சரஸ்வதியும் தத்தையா பூமிதனில் வாழியவே (சஞர்) தேவேந்திரன் இந்திராணி தேவர்களும்வாழி, திரமுள்ளமுனிவர்களும் சித்தர்களும்வாழி, முப்பத்துமுக்கோடி தேவர்களும்வாழி முதலானநாரதரும் கிம்புருடர்வாழி, நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளுமேவாழி, நலமுள்ள கருடர் காந்தருவர்களும் வாழி, விக்கினவிநாயகரு நித்தமிகவாழி, வேலவரும் பத்தினிகளிருவர்களும்வாழி, ஸ்ரீரங்கநாயகரும் ரங்கநாயகியும், சீ

வகாரணரான பார்த்தசாரதியும், சீரானவேதவல்லித்தா யாரும்வாழி, மேலானசென்னைபுரி ஆளுகின்றதுரைகள் மென்மேலும் எந்நாளும்வாழிமிகவாழி, சூப்ரீங் கோட்டிலுள்ள துரைகளெல்லாம் வாழி, துருப்பிடித்து வழக்கெடுக்கும் எல்லட்டும்வாழி, இன்னஞ்சிலதேசங்களை ஆளுகின்றராஜர் இணையில்லாத செல்வங்கள் பெற்றுமவர் வாழி, சிலமுள்ளகப்பல்கவி கற்றவர்கள் கேட்டோர் சிறப்பாய்படிப்போர்கள் ஜெயம்பெற்றுவாழி மேலான இக்கதை அச்சிதனிலிட்டோர்மென்மேலும் எந்நாளும்வாழிமிகவாழி (ஏலேலோ) (௰)

பார்த்தசாரதிப் பெருமாள்பேரில்

பலசரக்கு ஏலப்பாட்டு

முற்றிற்று.